# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 141/2013

Prosecution Witness 5

| | | | |
|---|---|---|---|
| Name | : சண்முகையா | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.சாமியா | Calling | : காவல் உதவி ஆணையார், திருப்பூர் நுண்ணறிவு பிரிவு |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of September 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது திருப்பூர் நுண்ணறிவு பிரிவில் காவல் உதவி ஆணையாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.11.2012 அன்று திருட்டு வீடியோ தடுப்பு குற்றங்கள் தொடர்பாக பொள்ளாச்சியில் முகாமிட்டபோது அன்று காலை அமகது பாஷா என்பவர் என்னிடம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று கோவை, திருட்டு வீடியோ தடுப்பு பிரிவு குற்ற எண். 255/2012, சட்டப்பிரிவு 51-A r/w. 63, 52-A , 68- A of Copy Right Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (முதல் தகவல் அறிக்கை **அசாஆ 9** ஆவணமாமக குறியீடு செய்யப்படுகிறது) அன்று காலை 11.30 மணிக்கு பொள்ளாசசி பேருந்து நிலையம் கோவை பஸ் நிறுத்துமிடம் சென்றபோது அங்கே புகார்தாரர் அடையாளம் காட்டிய எதிரி முகமது அலி என்ற அலி பாய் என்பவர் காப்புரிமை பெறாமல் புதிய தமிழ் பட CD கள் மற்றும் ஆபாச பட CD கள் வைத்திருந்ததை தனிநபர் சாட்சிகள் யாரும முன்வராதால் சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமி மற்றும் தலைமைக்காவலர் சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் 12 மணிக்கு மகஜரில் கைப்பற்றப்பட்டது. (கைப்பற்றுதல் மகஜர் **அசாஆ 10** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது), எதிரியிடம் இருந்து 1325 CD களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

2. பின்னர் 13 மணிக்கு சம்பவ இடத்தில் சாட்சிகள் சசிகுமார் மற்றும் தண்டபாணி முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைடம் தயார் செய்தேன். (பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அசாஆ 11** மற்றும் **அசாஆ 12** ஆணமாக குறியீடு செய்யப்படுகிறது.) அன்றே எதிரியை கைது செய்து எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமி மற்றும் தலைமைக்காவலர் முன்னிலையில் பதிவு செய்தேன். மேற்படி எதிரி தன்னை சூளேஸ்வரன்பட்டி, நேரு வீதியில் உள்ள தனது வீட்டிற்கு அழைத்துச்சென்றார், காப்புரிமை இல்லமல் புதிய பட CD களை எடுத்து ஒப்படைப்பதாக கூறியதின்பேரில் மேற்படி எதிரியின் வீட்டுக்கு சென்று மேற்படி சாட்சிகள் முன்னிலையில் காப்புரிமை பெறாத புதிய தமிழ்பட மற்றும் ஆபாச CD கள் தயாரிக்க பயன்படுத்திய Copy Right machine ஒன்றையும் 4650 CD களையும் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். (கைப்பற்றுதல் மகஜர் **அசாஆ 13** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). பின்பு நிலையம் வந்து படிவம் 91 மூலம் தடயங்களை கைப்பற்றி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது.

3. அன்றே திரைப்பட விநியோக சான்று கோரி கோவை, கோபாலபுரம் 2ம் வீதியில் உள்ள திரைப்பட விநியோகர் சங்கதிற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட்டது. 20.11.2012 அன்று மேற்படி சங்கத்தினரிடம் இருந்து கடிதம் பெறப்பட்டது. (மேற்படி கடிதம் **அசாஆ 14** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). 16.11.201 அன்று சாட்சிகள் அகமது பாஷா, சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னசாமி, தலைமைக்காவலர் சிதம்பரம், தண்டபாணி, சசிகுமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.11.2012 அன்று சாட்சி சண்முகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன்விசாணையை முடித்து எதிரி மீது 10.05.2013 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். வழக்கு சொத்துக்களான எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட CD க்கள் **அசாபொ 1 முதல் அசாபொ 5925** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

4. அசா 1 யாரிடம் எங்கு வைத்து புகார் கொடுத்தார் என்றால் திருட்டு வீடியோ சம்பந்தமாக பொள்ளாச்சியில் நான் முகாமிட்டிருந்தபோது என்னிடம் நேரடியாக வந்து புகார் கொடுத்தார். திருட்டு CD தடுப்பு பிரிவில் இருப்பதால் நான் சீருடையில்

இருக்கமாட்டேன் என்றால் சரிதான். சீருடையில் நான் இல்லாதால் அசா 1 நான் தடுப்பு பிரிவு அலுவலர் என்று எவ்வாறு தெரிந்து என்னிடன் புகார் கொடுத்தார் என்றால் அது சம்மந்தமாக நான் விசாரிக்கவில்லை. அசா 1ன் மீது திருட்டு CD சம்மந்தமாக எங்கள் தடுப்பு பிரிவில் எந்த வழக்கும் அவர் மீது இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பொள்ளாச்சி பேருந்து நிறுத்ததில் புறக்காவல் மையம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த காவலர் புறக்காவல் மைத்தில் அசா 1 எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி நான் விசாரணை செய்யவில்லை.

2. புகாரை பெற்று சம்பவ இடமான பொள்ளாச்சி பேருந்து நிறுத்திற்கு நான் செல்வதற்கு ½ மணி நேரம் ஆனது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்றபோது எதிரி அங்கு இருந்தாரா என்றால் எதிரி அங்குதான் இருந்தார். எதிரியிடம் இருந்து சம்பவ இடமான பொள்ளாச்சி பேருந்து நிலையத்தில் வைத்து எத்தனை CD கள் கைப்பற்றப்பட்டது என்றால் 1325 CD கள் கைப்பற்றப்பட்டது. 1325 CD களை மொத்தம் எத்தனை பை களில் வைக்கப்பட்டு இருந்தது என்றால் அட்டை பெட்டியில் வைத்திருந்தார், பைகளில் வைக்கவில்லை. மொத்தம் எத்தனை அட்டைபெட்டிகள் இருந்தது என்றும் அந்த அட்டை பெட்டிகளில் எத்தனை CD கள், எந்த பட CD கள் இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு பார்க்கப்பட்டு கைப்பற்றப்படவில்லை. துப்பாக்கி திரைப்பட CD 50 எண்ணிக்கை, மாற்றான் திரைப்பட CD 150, முகமூடி பட CD 250, சாருலதா பட CD 275, சாட்டை பட CD 150, MP3 பாடல் கேசட் CD 325, ஆபாச பட CD 125 மொத்தம் 1325 CD கள் ஆகும்.

3. 1325 CD களையும் தனித்தனியாக இயக்கி பார்க்கவில்லை என்றால் ஒவ்வொரு CD கள் பண்டில்களிலும் படத்தின் பெயர் மேலே எழுதப்பட்டு இருந்தது., அதன் அடிப்படையில் இயக்கி பார்க்கவில்லை. எதன் மீது படத்தின் பெயர் எழுதப்பட்டு இருந்தது என்றால் CD கள் மீது எழுதப்பட்டு இருந்தது. அதனை யார் எழுதினார்கள் என்ற விபரத்தை எனது விசாரணையில் நான் சேகரிக்கவில்லை. பொள்ளாச்சி பேருந்து நிலையம் தினமும் சுமார் 1000 பயணிகளை கடந்து வரும் என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியுள்ளேன் என்று கூறியுள்ளேன்.

அந்த சமயத்தில் பேருந்தில் உள்ள பயணியர்கள் கடைக்காரர்கள், மற்ற தனி நபர்களை சாட்சியாக வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

4. எனது விசாரணையில் மதியம் 01.30 மணி முதல் 05.00 மணி வரை பொளளாச்சி பேருந்து நிலையத்தில் தான் வேலை தேடிக்கொண்டிருந்ததேன் என்று கூறியிருந்தால் அது சரியல்ல. சொந்த வேலை காரணமாக பேருந்து நிலையத்தில் இருந்தார் என்று என்னிடம் தெரிவித்தார். சந்தேகத்திற்கு புறம்பாக அசா 1 பேருந்து நிலையத்தில் வெகுநேரம் சுற்றிக்கொண்டிருந்ததால் போலீசார் அவரை பிடித்து புற காவல் மையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அசா 1 என்னிடம் நேரடியாக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் அவரை புறகாவல் மையத்தில் வைத்திருந்தபோது புகாரில் கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. உண்மையிலேயே சம்பவ இடமான பொள்ளாச்சி பேருந்து நிலையத்திற்கு சென்று மேற்படி CD களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து நான் கைப்பற்றியிருந்தால் பொது மககள் சாட்சியாக இருந்ததிருப்பார்கள் என்றும் அவ்வாறு அவர்கள் சாட்சியாக வைத்து கைப்பற்றப்படாததால் நான் கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டில் சாட்சிகள் முன்னிலையில் CD கள் கைப்பற்றியுள்ளதாக நான் தெரிவித்துள்ளேன், எதிரியின் வீடு ஓட்டு வீடா அல்லது சிமெண்ட் வீடா என்றால் வெகுகாலமாகிவிட்டதால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

6. எதியின் வீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் அந்த வீட்டில் யாரும் இல்லை நாங்கள் சென்றபோது வீடு திறந்த நிலையில் இருந்தது. அந்த வீட்டில் மொத்தம் எத்தனை அறை இருந்தது என்றால் அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை முதல் அறையில் கைப்பற்றினோம், எதிரியின் வீட்டின் அருகே உள்ள வீட்டு குடியிருப்புவாசிகளின் பெயர்கள் என்ன என்றால் அது பற்றி விசாரணை செய்யவில்லை. மேலும் அவர் வீட்டின் அருகில் பேக்கரி இருந்ததா என்று எனக்கு சரியாக நினைவில்லை. உண்மையில் நான் எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை என்றும் அங்கிருந்து எந்த CD களும் கைப்பற்றப்படவில்லை என்றும் மேற்கூறிய சங்கதியில் இருந்து நான் தவறான சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. மேலே கண்ட CD களுக்கு எதிரி காப்புரிமை வாங்கவில்லை என்று எப்பொழுது நான் தெரிந்துகொண்டேன் என்றால் எதிரியை கைது செய்த அன்று தெரிந்துகொண்டேன். தமிழ்நாடு திரைப்பட சங்க விநியோகஸ்தர்கள் மேலாளரிடம் எந்த தேதியில் சான்று பெற்றேன் என்றால் 20.11.22012 அன்று பெற்றேன். இந்த வழக்கு புள்ளிவிபர பட்டியலுக்காக போடப்பட்டது என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(SD/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.